அடிப்படையிலே, இந்த ஆண்டு, 2013–2014 ஆம் ஆண்டில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கிராமங்களை ஆய்வு செய்து, புதிய கட்டடம் கட்ட பரிசீலிக்கும் என்பதைத் தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

திருமதி ம. சக்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியிலுள்ள அனைத்து கால்நடை மருத்துவமனைகளுக்கும் இந்த ஆண்டே புதிய கட்டடம் கட்டித் தரப்படும் என்று அறிவித்த, வாழும் வள்ளல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 495, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

495—

பேருந்து வசதி

***25022—திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, துறையூரிலிருந்து E.பாதர்பேட்டைக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) துறையூர் தொகுதி மக்களின் நலன் கருதி, முழுமையான பேருந்து வசதிகளை வழங்கும் வகையில், இரண்டே ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா

அவர்கள் ஏழு புதிய வழித்தடங்களை வழங்கியுள்ளார்கள். அந்த வழித்தடங்கள்மூலம் இயக்கப்பட்டு வரும் பேருந்துகளை மக்கள் சிறப்பாகப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, யாருக்கும் அஞ்சாத துணிவு, கொண்ட கொள்கையிலே உறுதி, தன்னலமற்ற தாய்மை உணர்வோடு, (மேசையைத் தட்டும் ஒலி) தரணி போற்றும் வளர்ச்சித் திட்டங்களையும், தமிழினம் காக்கும் புரட்சித் தீர்மானங்களையும் நிறைவேற்றி, "எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்" என்று அல்லும், பகலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கும், ஆளுமையின் மொத்த உருவம், இன்றைய தமிழகம், நாளைய பாரதம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நலிந்து கிடந்த போக்குவரத்துத் துறையை தலைநிமிரச் செய்து, துறையூர் தொகுதி, துறையூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கவும், ஒப்பிலியபுரம் ஒன்றியத்தில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க ஆணையிட்டும், துறையூரிலிருந்து, காஞ்சிபுரம், இராமேஸ்வரம், குமுளி, வேளாங்கண்ணி ஆகிய புனிதத் தலங்களுக்கும், சென்னைக்குக் கூடுதலாக 2 பேருந்துகளையும், ஆக 6 புதிய வழித்தடங்களை அளித்து, பேருந்து வசதி செய்து கொடுத்த சரித்திரம் போற்றும் சாதனைத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திருமதி த. இந்திராகாந்தி: துறையூர் தொகுதியிலிருந்து E. பாதர்பேட்டை, சங்கம்பட்டி, கரட்டூர் பகுதி மாணவ,

2013 மே 14]

மாணவிகளுக்கு பள்ளி நேரங்களில் பேருந்து வசதி வேண்டுமெனக் கேட்டிருந்தேன். அந்தக் கேள்விக்குப் பதில் வருவதற்கு முன்பாகவே, அந்த வழித்தடத்தில் 4 நடைகள் பேருந்து வசதி செய்து கொடுத்த வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். துறையூர் பகுதியைச் சார்ந்த அதிக மக்கள், வேலை தேடிச் சென்று, கோத்தகிரி மலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். எனவே, துறையூரிலிருந்து கோத்தகிரி வழியாக ஊட்டிக்கு ஒரு பேருந்து வசதி செய்து கொடுக்க மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூரிலிருந்து ஊட்டிக்குச் செல்லும் பயணிகளுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கும்பட்சத்தில், துறையின் சார்பாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவின் உத்தரவைப் பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு செய்து ஏற்பாடு செய்து கொடுக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. புத்திசந்திரன் அவர்கள்.

திரு. புத்திசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற ஒவ்வொரு மதத்திற்கும் அவரவர்களுக்கென்று தனித்தனி இறை வழிபாடு உண்டு. ஆனால், அந்த மதத்திலே இருக்கின்ற ஒட்டுமொத்த மக்களும்

போற்றி வணங்குகிற மானுட தெய்வமாகவும், நாளைய பாரதத்திற்குத் தேவையான (மேசையைத் தட்டும் ஒலி) வலிமையான முடிவுகளை உடனடியாக எடுத்து அமல்படுத்தக்கூடிய வலிமைமிக்க தலைவராகவும் விளங்கிக்கொண்டிருக்கிற தமிழகத்தினுடைய காவல் தெய்வம், தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 25—4—2013 அன்று தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதி 110—ன்கீழ் அறிவித்த மின் திட்டங்களில், மெகா திட்டமாக நீலகிரி மாவட்டம், உதகை சட்டமன்றத் தொகுதியில் எனது கிராமத்தில் இருக்கின்ற சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். நீலகிரி மாவட்டத்திலே முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட குந்தா கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலையினுடைய பொன் விழாவிற்கு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களே நேரடியாக வந்து சிறப்பித்தார்கள். அதே இடத்திலேதான் இந்த சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டத்திற்கான இடம் அமைந்திருக்கிறது. நீலகிரி மாவட்டத்தினுடைய மக்கள் விருந்தோம்பலுக்குப் பெயர்பெற்றவர்கள். நீலகிரி மாவட்டத்திலிருந்து தமிழகத்திற்கு வெளிச்சம் தரக்கூடிய மின் திட்டத்தை அறிவித்த தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியினைத் தெரிவித்து, நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் சட்டமன்றத் தொகுதி, குந்தா பகுதியிலே ஏராளமான மலையாள மொழி பேசுகின்ற மக்களும், கன்னட மொழி பேசுகின்ற மக்களும் இருக்கின்ற காரணத்தினாலே, அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான குந்தா பகுதியிலிருந்து பாலக்காட்டிற்கும், குந்தா பகுதியிலிருந்து மைசூருக்கும் தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு பேருந்து இயக்க ஆவன செய்யுமா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய அரசியல் வரலாற்றில் மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கின்ற மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னுதாரணமாக, மலைப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் சிறப்பான போக்குவரத்து வசதிகளைப் பெறுவதற்கு 35 கோடி

ரூபாய் செலவில் 250 சிற்றுந்துகளை Small Bus—களை வழங்கி இருக்கின்ற, பொற்கால ஆட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த Small Bus-களோடு, நீலகிரி மாவட்டத்திற்கு மட்டும், மலைப் பகுதி மக்களுடைய தேவைகளை அறிந்து, 8 புதிய வழித்தடங்களில் பேருந்துகளை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இயக்க ஆணையிட்டு, இன்று முதல் இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற அந்த வழித்தடத்தில் பயணிகளுடைய எண்ணிக்கைக்கேற்ப பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 496, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

496—

குடமுழுக்கு

***21313—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, குழித்துறை அருள்மிகு மஹாதேவர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதி, குழித்துறை அருள்மிகு மஹாதேவர் திருக்கோயிலுக்கு மாண்புமிகு இதய